கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், கண்டவராயன்பட்டி ஊராட்சியில், தோட்டக்கலை மலைப்பயிர்கள் துறையின் சார்பில் 26.09.2024 அன்று பனை மேம்பாட்டு இயக்கம் 2024-25ன் கீழ் நடைபெற்ற பனை விதை நடும் பணியினை தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், துணை இயக்குநர் (தோட்டக்கலை துறை) திருமதி சு.குருமணி, திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர் சோ.சண்முகவடிவேல், உதவி இயக்குநர்கள் (தோட்டக்கலை துறை) தர்மர், திருமதி ரேகா உட்பட பலர் உள்ளனர்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு

சமாஜ்வாடி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் வாழ்த்து!

லக்னோ, செப்.30- துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்து சமாஜ்வாடி கட்சியின் தலைவரும், உத்திரப்பிரதேச மாநில முன்னாள் முதல் வருமான அகிலேஷ் யாதவ் செய்தி வெளியிட்டுள்ளார்.

அதில் அவர், "தமிழ்நாடு துணை முதலமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துகள்!. புதிய பொறுப்பில் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெற்றிகரமாகச் செயல்பட வாழ்த்துகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

கொலம்பியாவில்

ஹெலிகாப்டர் விபத்தில் 8 ராணுவ வீரர்கள் உயிரிழப்பு!

கொலம்பியா, செப். 30 - வெனிசுலா நாட்டு எல்லையையொட்டிய பகுதியில், கொலம்பியா நாட்டை சேர்ந்த ராணுவ வீரர்கள் 8 பேர் ஹெலிகாப்டர் ஒன்றில் நிவாரண பணி ஒன்றை மேற்கொள்வதற்காக புறப்பட்டு சென்றனர்.

அப்போது அந்த ஹெலிகாப்டர் குமரிபோ என்ற நகராட்சிக்கு உட்பட்ட கிராம பகுதியில் திடீரென விபத்தில் சிக்கியது. இதில், ஹெலிகாப்டரில் பயணித்த ஒருவரும் தப்பவில்லை.

இந்த விபத்தில், ராணுவ வீரர்கள் 8 பேரும் உயிரிழந்து உள்ளனர்.

இதனை அந்நாட்டின் ஜனாதிபதி கஸ்டாவோ பெட்ரோ அவருடைய எக்ஸ் சமூக ஊடக பதிவில் பகிர்ந்து உள்ளார். எனினும், விபத்து எப்போது நடந்தது போன்ற விவரங்களை வெளியிடவில்லை.

ஈரோடு வடக்கு மாவட்டம்

தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் - வேட்பு மனுத் தாக்கல்

தலைமைக் கழகம் அறிவிப்பு

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், ஈரோடு வடக்கு மாவட்டம்" தலைமைச் செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட வி.பி.சண்முகசுந்தரம் மறைவெய்திய காரணத்தால்;

ஈரோடு வடக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி. இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024 அக்டோபர் 3 (வியாழக் கிழமை) அன்று ரூ.25000/ வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்."

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் ஈரோடு வடக்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய / நகர / பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டப் பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

தலைமைக் கழகத்தில், வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ. 1000/ வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 29.9.2024

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

உதயநிதி ஸ்டாலின் துணை முதல்வரானதை

பல்லாவரத்தில் பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கி கொண்டாட்டம்!

பல்லாவரம் இ. கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமையில்

பல்லாவரம், செப். 30 தமிழ்நாடு அரசின் துணை முதலமைச்சராக உழைப்பால் உயர்ந்த இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதவி ஏற்றதை தொடர்ந்து பல்லாவரம் பகுதி முழுவதும் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமையில் பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு அரசின் துணை முதலமைச்சர் ஆக நாடாளுமன்றத் தேர்தலிலும் இதற்கு முன் நடந்த பல்வேறு தேர்தலிலும் தேர்தல் களத்தில் இரவு பகல் பாராமல் பம்பரமாக சுழன்று பணியாற்றி உழைத்த நமது இளம் தலைவர் அவர்களின் உழைப்புக்கு என்றோ துணை முதலமைச்சர் கிடைக்கும் என்று எதிர்பார்த்த நிலையில் அப்பொறுப்பு வழங்கப்பட்டதை தமிழ்நாடு முழுவதும் கழக நிர்வாகி களும், தோழர்களும் பொதுமக்களும் கொண்டாடி மகிழுந்து கொண்டிருக்கின்ற இந்த தருணத்தில் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ஒவ்வொரு பகுதியிலும் பட்டாசு வெடித்து பொது மக்களுக்கு லட்டு போன்ற இனிப்புகள் வழங்கி சிறப்பாக கொண்டாடப்படுகின்றன.

அதன் தொடர்ச்சியாக குரோம்பேட்டை பேருந்து நிலையம் அருகில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் காஞ்சிபுரம் மாவட்ட கழக துணைச் செயலாளர் இ.கருணாநிதி தலைமையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகள் தொண்டர்கள் புடை சூழ பட்டாசு வெடித்து பேருந்து நிலையத்தில் இருந்த பொதுமக்களுக்கும், பேருந்தில் வருகை தந்த பொது மக்களுக்கும் இனிப்பு வழங்கி மிகச் சிறப்பாக கொண்டாடப் பட்டது.

இந்நிகழ்ச்சியில் மண்டல தலைவரும் பகுதி செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை பகுதி கழகச் செயலாளர்கள் இ.எஸ்.பெர்னார்ட், ஏ.கே.கருணாகரன், மாவட்ட பிரதிநிதிகள், பகுதி கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழகச் செயலாளர், வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், பொதுமக்கள் என ஏராளமானோர் திரண்டு இருந்தனர்.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட - தி.மு.க. பொறியாளர் அணிக்கு

ஒன்றிய - நகர - பேரூர்க் கழகங்களுக்கு அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பதவிகளுக்கு விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்!

மாவட்டச் செயலாளர் - திருத்தணி - எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணிக்கு ஒன்றிய, நகர, பேரூர் பொறுப்புகளுக்கு அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விருப்பமுள்ள கழகத் தோழர்கள் கீழ்க்கண்ட வழிமுறைகளின் படி விண்ணப்பிக்க வேண்டும்

1. விண்ணப்பிப்பவர்கள் பொறியியல் பட்டப்படிப்பு / பட்டய படிப்பு நிறைவு செய்தவராக இருக்க வேண்டும்.
2. விண்ணப்பிப்பவர்கள் அந்தந்த பகுதியின் வாக்காளராக இருத்தல் அவசியம்.
3. ஒரு அமைப்பாளர், ஐந்து துணை அமைப்பாளர்கள் எனும் அளவுக்கு மிகாமல் பொறுப் புகள் நியமிக்கப்படுகின்றனர்.
4. பெண் பொறியியல் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
5. விண்ணப்பத்தில் இணைக்கப்பட்டுள்ள QR CODE வழியே பொறியாளர் அணியின் போர்ட்டல் வழியே மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.
6. விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தாரர்களை நேரில் அழைத்து நேர்முகத் தேர்வு நடைபெறும்.

ஆகவே ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் மற்றும் மாவட்ட பொறியாளர் அணிநிர்வாகிகள் மேற் கண்ட விதிமுறைகளின் படி விண்ணப்பங்களை இணைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திருத்தணி **எஸ்.சந்திரன்** எம்.எல்.ஏ.
செயலாளர் -
திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

அமைச்சர் மா. சுப்பிரமணியன் - ஏ.எம்.வி. பிரபாகராஜா எம்.எல்.ஏ. - க.தனசேகரன் - கன்னிகை ஜி. ஸ்டாலின் பங்கேற்பு

கலைஞர் நகர் வடக்குப் பகுதி அவசர ஆலோசனைக் கூட்டம்

பகுதிச் செயலாளர் மு.ராசா அறிவிப்பு!

சென்னை, செப். 30 - கலைஞர் நகர் வடக்குப் பகுதிச் செயலாளர் மு.ராசா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கலைஞர் நகர் வடக்கு பகுதிக் கழக ஆலோசனைக் கூட்டம் எனது (பகுதிச் செயலாளர் மு.ராசா) தலைமையில் ஆற்காடு சாலையில் உள்ள கலைஞர் நகர் வடக்கு பகுதி கழக அலுவலகத்தில் இன்று (30-09-2024) மாலை 5 மணிக்கு நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில், பொதுக் குழு உறுப்பினர்கள், வட்டக் கழக செயலாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள் , மாவட்ட அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் மற்றும் அனைத்துஅணிகளின் பகுதி அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு பகுதிச் செயலாளர் மு.ராசா கேட்டுக் கொண்டுள்ளார்.

திருவாரூரில் நலத் திட்டப் பணிகள்!

திருவாரூர், செப். 30 - திருவாரூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கூத்தாநல்லூர் நகரம் மற்றும் திருத்துறைப்பூண்டி ஒன்றிய பகுதிகளில் தமிழ்நாடு அரசின் முதல்வர் - திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி நிறைவேற்றப்பட்டு கட்டி முடிக்கப்பட்ட அரசு கட்டிடங்களையும், பள்ளி மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளையும் மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ. திறந்துவைத்து வழங்கினார். வை.செல்வ ராஜ் எம்.பி., மாரிமுத்து எம்.எல்.ஏ, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் தலையாமங்கலம் ஜி.பாலு உள்ளிட்டோர் உடன் பங்கேற்றனர்.

திருவாரூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கூத்தாநல்லூர் நகரம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித் துறையால் வழங்கப்பட்ட விலையில்லா மிதிவண்டிகளை மாணவிகளுக்கு சட்டமன்ற உறுப்பினர் பூண்டிகே.கலைவாணன் எம்.எல்.ஏ. வழங்கினார். இந்த விழாவில் கூத்தாநல்லூர் நகரக் கழக செயலாளர் எஸ்.வி.பக்கிரிசாமி, நகர் மன்ற தலைவர் பாத்திமா பஷீரா மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள், நகரக்கழக நிர்வாகி கள் பங்கேற்றனர்.

அதனைத் தொடர்ந்து திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பனையூர் ஊராட்சியில் கட்டி முடிக்கப்பட்ட ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடத்தினையும், ஆதிரங்கம் ஊராட்சியில் கட்டி முடிக்கப்பட்ட அங்கன்வாடி கட்டிடம், நெல் உளர் களம், மற்றும் சேமிப்புக் கிடங்கு ஆகியவற்றை மாவட்டக் கழக செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து ஆகியோர் திறந்து வைத்தனர்.

இந்த நிகழ்வுகளில் மாவட்ட ஊராட்சி பெருந்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, ஒன்றிய குழுத்தலைவர் அ.பாஸ்கர், துணைத்தலைவர் எம்.ராமகிருஷ்ணன், ஒன்றிய செயலாளர் ப.பிரகாஷ், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி மற்றும் பலர் பங்கேற்றனர்.

தமிழ்நாடு துணை முதலமைச்சராக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றதைக் கொண்டாடும் வகையில் கலைஞர் நகர் பகுதி 137 ஆ வட்ட கழக செயலாளர் அ.கதிரேசன் தலைமையில் பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது இந்நிகழ்ச்சியில் கழகத் தோழர்கள் மகளிர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

தி.மு.க. 15 ஆவது பொதுத் தேர்தல்

ஈரோடு வடக்கு மாவட்டம், ஒன்றியக் கழகப் பொருளாளர் மற்றும் மாவட்டப் பிரதிநிதி பொறுப்புக்கான தேர்தல் - வேட்புமனுத் தாக்கல்

தலைமைக் கழகம் அறிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், ஈரோடு வடக்கு மாவட்டம், சத்தியமங்கலம் வடக்கு ஒன்றியப் பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட ச.பொன்மேன் நம்பியூர் ஒன்றியப் பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட கே.ஏ.பொன்னுச்சாமி மற்றும் பவானி வடக்கு ஒன்றியத்தின் மாவட்டப் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட கே.பி.பாலு ஆகியோர் மறைவெய்திய காரணத்தால்;

ஈரோடு வடக்கு மாவட்டம், சத்தியமங்கலம் வடக்கு ஒன்றியப் பொருளாளர் - நம்பியூர் ஒன்றிய பொருளாளர் மற்றும் பவானி வடக்கு ஒன்றியம் மாவட்டப் பிரதிநிதி ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புகளுக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024. அக்டோபர் 3 (வியாழக் கிழமை) அன்று ரூ.1000/ வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

தகுதி விவரம்

ஒன்றியக் கழக நிர்வாகப் பொறுப்புக்குப் போட்டியிடுவோர் அவர்கள் வேட்புமனுக்களில் முன்மொழிபவரும், வழிமொழிபவரும் அந்த ஒன்றியத்திற்கு கிளைக் கழகங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கிளைச் செயலாளராகவோ, பேரூர்ச் செயலாளராகவோ,ஒன்றியப் பிரதிநிதியாகவோ இருத்தல் வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.25/ வீதம் தலைமைக் கழகத்தில் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 29.9.2024

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

தி.மு.க. 15 ஆவது பொதுத் தேர்தல்

ஈரோடு வடக்கு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் நகர அவைத் தலைவர் மற்றும் துணைச் செயலாளர் (பொது) ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் வேட்பு மனு தாக்கல்

தலைமைக் கழகம் அறிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், ஈரோடு வடக்கு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் நகர அவைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜி.மணி துணைச் செயலாளராக (பொது) தேர்ந்தெடுக்கப்பட்ட பி.மெய்யழகன் ஆகியோர் மறைவெய்திய காரணத்தால்;

ஈரோடு வடக்கு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் நகர அவைத்தலைவர் மற்றும் துணைச் செயலாளர் (பொது) ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புகளுக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024. அக்டோபர் 3 (வியாழக் கிழமை) அன்று ரூ.1000/ வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

தகுதி விவரம்

நகரக் கழக நிர்வாகப் பொறுப்புக்குப் போட்டியிடுவோர் அவர்கள் வேட்புமனுக்களில் முன்மொழிபவரும், வழிமொழிபவரும் அந்த நகரத்திற்குட்பட்ட வார்டுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு செயலாளராகவோ, பிரதிநிதியாகயோ இருத்தல் வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.25/ வீதம் தலைமைக் கழகத்தில் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 29.9.2024

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.